பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 23 செவ்வாய்க்கிழமை 07.01.2025 கதிர் 061

## இனி இது ரகசியம் அல்ல!

புலம்பெயர் ஈழத் தமிழரும் பெரு முதலாளியுமான சுபாஸ்கரன் அல்லிராஜாவும் அவரால் நிறுவப்பட்டு தலைமை தாங்கப்படும் லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு ☞ 2

# சர்வதேசச் சந்தையிலேயே மருந்துக்குத் தட்டுப்பாடாம்

சர்வதேச சந்தையில் சில அத்தியாவசிய மருந்துகள் இல்லாத காரணத்தினால் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கால அவகாசம் எமக்குத் தேவைப்படுவதுடன் மருந்துப் பொருட்களுக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர், கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச சந்தையில் சில அத்தியாவசிய மருந்துகள் இல்லாத காரணத்தால் தற்போது நாட்டில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தட்டுப்பாடாக உள்ள மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கான கால அவகாசம் எமக்குத் தேவைப்படுகிறது. எவ்வாறெனினும் பொதுமக்களைகருத்திற்கொண்டுமருந்து பொருட்களுக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிநடவடிக்கைகளை துரிதப்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறிப்பாக சில மருந்துகளை இறக்குமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளன. சர்வதேச சந்தையில் மருந்துகள் கிடைக்கும் பட்சத்தில் அவற்றை கொள்வனவு செய்து அவற்றை துரிதமாக அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க ஆளும் தரப்புத் தயாராக உள்ளது.

நிதிப் பற்றாக்குறை காரணமாக மருந்துகளை இறக்குமதி செய்வதில் பல சிக்கல் உருவாகியுள்ளன. மருந்துக் கொள்வனவுடன் தொடர்புடைய அமைப்புகளைச் சீர்செய்ய வேண்டியுள்ளது. ☞ 8

## பெருந் தோட்டத் தொழிலில் புதிய குடை ஒன்று அறிமுகம்

ஹொரணை பெருந்தோட்ட நிறுவனம் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்டோக்ஹொம் தோட்டத்தின் தோட்ட முகாமைத்துவ அதிகார சபை, தேயிலை கொழுந்து பறிக்கும் தோட்ட தொழிலாளர்களுக்கு புதிய குடையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ள ☞ 8

## கடவுச்சீட்டுக்களை வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

வெற்றுக் கடவுச்சீட்டுக்கான கொள்வனவு கட்டளையை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இலத்திரனியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர்களுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் 7 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான ☞ 8

## ஜனவரி, பெப்ரவரியில் சிறப்பு ரயில் சேவைகள்

தைப்பொங்கல், சுதந்திர தினம் மற்றும் வார விடுமுறை நாட்களுக்காக ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சிறப்பு தொடருந்து சேவை அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக இலங்கை ரயில்வே திணைக்களத்தால் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையிலும் கொழும்பு ☞ 2

# டிஜிட்டல் அ.அட்டை தயாரிப்பை இந்தியாவிடம் வழங்க எதிர்ப்பு

### தரவுகளால் நாட்டை அடிபணியச் செய்யமுடியும் என்று சாடுகிறது மக்கள் போராட்ட இயக்கம்

இலங்கை மக்களுக்கான டிஜிட்டல் அடையாள அட்டைகளைத் தயாரிக்கும் பொறுப்பை இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. நாம் தகவல் சகாப்தத்தில் வாழ்கிறோம், ஒரு நாடு தனது மக்களின் தகவல்களையும் தரவுகளையும் வெளிநாட்டு நாட்டிற்கு வழங்குவது பெரும் ஆபத்து. ஒரு நாட்டு மக்களின் தகவல்களைப் பெறுவதன் மூலம்கூட ஒரு தேசத்தையும் மற்றொரு நாடு அடிபணியச் செய்ய முடியும். அந்த மூலோபாயத் தலையீட்டை இந்தியா இன்று இலங்கையில் செய்து வருகிறது. இந்த நிலையில், இலங்கை மக்களின் பொது பாதுகாப்பு பெரும் ஆபத்தில் உள்ளது. எனவே டிஜிட்டல் அடையாள அட்டைப் பணியை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைக்கும் முடிவை உடனடியாக திரும்பப் பெறுவதற்கான முன்மொழிவு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவேண்டும்.

இவ்வாறு மக்கள் போராட்ட ☞ 2

## திசர நாணயக்காரவின் விளக்கமறியல் நீடிப்பு

லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட திசர இரோஷன நாணயக்காரவை ஜனவரி 17 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கம்பஹா நீதிவான் நேற்று இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார். திசர இரோஷன நாணயக்கார முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் ஆவார். தனது சகோதரர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராகப் பதவியில் இருந்த ☞ 8

### ஓமானில் பணிப்பெண் இறப்பு தொடர்பில்

## சமுர்த்திப் பணியாளர் உட்பட மூன்று சந்தேகநபர்கள் கைது

பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு ஓமானில் உயிரிழந்த இலங்கை யுவதியொருவரை தொழிலுக்காக அனுப்பிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை - சூச்சி கிராமத்தைச் சேர்ந்த 22 வயதான இளம் யுவதி ஒருவரே ☞ 8

## சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் அரிசி விலை ரூ. 300க்கு எகிறும்

### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

பொருளாதார அறிவு அற்ற இந்த ஆளும்தரப்பால் சித்திரைப் புத்தாண்டின்போது ஒரு கிலோ அரிசியை 300 ரூபாய்க்கு வாங்க வேண்டிய நிலைமை நாட்டுக்கு மக்களுக்கு ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

அவர் கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரம் தொடர்பில் எவ்வித அறிவும் இன்றியே ☞ 8

### ஜனாதிபதி செயலகம், அயலுறவு அமைச்சு முன்பாக

## ரஷ்யப் படையில் வலிந்து சேர்க்கப்பட்ட உறவுகளை மீட்கக் கோரிப் போராட்டம்

ரஷ்யப் படையில் வலிந்து இணைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை மீட்டுத் தருமாறு வலியுறுத்தி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும், அயலுறவுத்துறை ☞ 2

## 2024 இல் பதுளையில் மட்டும் 6,700 பேருக்கு விசர்நாய்க்கடி

2024ஆம் ஆண்டு பதுளை போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நோயாளர்களில் சுமார் 6,700 பேர் விசர்நாய் கடிக்கு ஆளானவர்கள் என அவசர சிகிச்சைப் பிரிவின் தலைவரும் அரச வைத்தியர் சங்கத்தின் உதவிச் செயலாளரும் ஊடக குழு உறுப்பினருமான மருத்துவர் பாலித்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் பதுளை போதனா வைத்தியசாலையின் ☞ 8

## ரூ. 28 ஆயிரம் மில்லியன் பெறுமதியான போதைப் பொருள் 2024இல் கைப்பற்றல்

### கடற்படையினர் அறிவிப்பு: 407 பேரும் கைது

2024ஆம் வருடத்தில் மாத்திரம் 28,158 மில்லியன் ரூபாயிற்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள் மற்றும் போதைவில்லைகளை இலங்கை கடற்படை கைப்பற்றியுள்ளது.

கடற்படை, பொலிஸ், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் சுங்கத் திணைக்களம் உள்ளிட்ட கடல்சார் பாதுகாப்பு தரப்பினருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட சோதனைகளின் ஊடாக இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய போதைப் பொருள் கடத்தல், சட்டவிரோதமாக பொருட்களை கொண்டு செல்லுதல் உள்ளிட்ட சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த 407 பேர் கைது செய்யப்பட்டனர் என்று இலங்கை கடற்படை ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இயங்கும் லைக்கா குழுமமும் ''உள்ளூர் ஊடகத் துறையை மறைமுகமாகவும் மோசடியாகவும் கையகப்படுத்துதல்'' மூலம் இலங்கையில் தமது செயற்பாடுகளை தீவிரமாக விரிவுபடுத்துவதாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுபாஸ்கரன் இந்தியாவில் திரைப் படத் தயாரிப்புத் துறையிலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டு வருகின்றார். நடிகர்கள் ரஜினி, கமல் உட்படப் பலரின் திரைப் படங்களைத் தயாரித்துள்ளார் சுபாஸ்கரன். தொலைத் தொடர்புத் துறையிலும் அவருக்குப் பல நிறுவனங்கள் உள்ளன. கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பில் ஜனநாயகத் தேசியக் குரல் என்ற கட்சியை வாங்கி அதற்கூடாகப் பலரையும் போட்டியிட வைத்தார் என்ற குற்றச்சாட்டுக்களும் எழுப்பப்பட்டன. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள கட்சிகள் பலவற்றுக்கும் தேர்தல் நிதி கொடுக்க முனைந்தார் என்றும் அதற்குப் பதிலாக தனது நிறுவனத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்கு அவர்கள் உறுதுணையாக நிற்கவேண்டும் என்று உடன்படிக்கை செய்ய முயன்றார் என்றும்கூடக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சில் வேட்பாளர்கள் அவரது தரப்பினரிடமிருந்து தேர்தல் செலவுகளுக்காகக் கோடிக்கணக்கில் பணம் பெற்றுக்கொண்டனர் என்கிற குற்றச்சாட்டுக்களும் தெரிவிக்கப்படுகின்றன.

இந்தப் பின்னணியிலேயே இப்போது உள்ளூரில் அவரது நடவடிக்கைகளுக்கு எதிராக ஒரு மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜமுனி கமந்த துஷாரா இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

வெளிநாட்டு அமைப்புக்கள் ஊடகங்களை வைத்திருப்பதைத் தடை செய்யும் இலங்கை விதிமுறைகளைத் தவிர்க்கும் வகையில் இது தொடர்பான கொடுக்கல், வாங்கல்கள் பினாமி ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்கு இத்தகைய இலங்கை சட்டங்களை மீறுவது பெரும் அச்சுறுத்தலாகும் எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு, டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அமைச்சரவை உறுப்பினர்கள், பத்து நிறுவனங்கள் மற்றும் இலங்கையின் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு அலைவரிசைகளின் பணிப்பாளர்கள் உட்பட அறுபது பிரதிவாதிகள் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவில் லைகா குழுமத்துக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சொந்தமான மற்றும் அந்த நிறுவனம் கட்டுப்படுத்தப்படுத்தும் எட்டு நிறுவனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அந்த நிறுவனங்கள் வெகுஜன ஊடக அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு உரிமங்களையும், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தால் வழங்கப்பட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு அதிர்வெண் உரிமங்களையும் வைத்திருக்கின்றன.

''சட்டவிரோதமான, தவறான, மோசடி மற்றும் ப்ராக்ஸி மூலம், லைக்கா குழுமம் தற்போது 11 தொலைக்காட்சி மற்றும் வானொலிகளைக் கட்டுப்படுத்துகிறது'' என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

சுபாஸ்கரனும் அநுரகுமார திசநாயக்கவும் (ஜனாதிபதியாவதற்கு முன்பாக) வெளிநாடு ஒன்றில் நேரில் சந்தித்துப் பேசியிருந்தனர் என்கிற அளவில் இந்த ஆளும் தரப்புக்கும் லைக்காவிற்குமான உறவுகள் இருக்கும் பின்னணியில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

..........................................................

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என தொடர் தோல்விகளைச் சந்தித்த பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு கடும் அழுத்தங்கள் வரத் தொடங்கியுள்ளன. கட்சியீன் தலைமையிலிருந்து அவர் விலகவேண்டும், புதிய உத்வேகமாக தலைமை ஒன்று கட்சிக்குத் தேவை போன்ற அழுத்தங்கள் ஒருபுறமாகவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணையவேண்டும் என்கிற அழுத்தம் ஒருபுறமாகவும் அவரை அழுத்துகின்றன.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கீட்டினாலும் ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள்ளும் பெரும் பிரச்சினைகள். பங்காளிக் கட்சிகள் அதிருப்தியடைந்துள்ளன. சில கட்சிகள் இனிவரும் தேர்தலில் தாம் தனித்தே போட்டியிடப்போவதாக சஜித்திற்குத் தெரியப்படுத்தியுள்ளன. இப்படிக் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகிய நிலையில் ஐ.தே.கவுடன் மீண்டும் கூட்டுச் சேர்வது குறித்து ஆராய சஜித் இணங்கியுள்ளார். இதுநாள் வரையில் ரணில் தலைமையில் இருக்கும் வரையில் மீண்டும் சேர்வது குறித்துப் பேச்சே இல்லை என்று கூறிவந்தவர். இப்போது ரணிலுடன் இது குறித்துப் பேச தயாராகிவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் விரைவிலல் இ;தப் பேச்சு இடம்பெறும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

''மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றார்கள். அது தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். அந்த வகையில் எதிர்வரும் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்துவதற்க முயற்சிக்கவுள்ளோம். தற்போது வரையில் எவ்விதமான சந்திப்புக்களையும் நடத்தப்படவில்லை. அதுபற்றிய தீர்மானங்கள் விரைவில் அறிவிக்கப்படும்'' என்றார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

# வடமத்திய மாகாணத்தில் தரம் II பரீட்சை நிறுத்தம்

## வினாத்தாள் வெளியானதால் பரபரப்பு

வடமத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் 11ஆம் தர பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளன.

தவணைப் பரீட்சை தொடர்பான சிங்கள இலக்கிய வினாத்தாள் சமூக ஊடகங்கள் ஊடாக வெளியாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நேற்று நடைபெறவிருந்த இறுதிப் பரீட்சை பிற்போடப்பட்டதாக வடமத்திய மாகாண கல்விச் செயலாளர் சிறிமெவன் தர்மசேன தெரிவித்தார்.

அதன்படி, நேற்றுக் காலை வரை 8 வலயங்களில் உள்ள 30 பிரிவுகளைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் குறித்த வினாத்தாள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

# விளக்கமறியல் நீடிப்பு

லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மேல் மாகாண சபையின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சலோச்சன கமகே உட்பட இரு சந்தேகநபர்களையும் ஜனவரி 17 வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் கொழும்பு ரொரிங்டன் அவனியுவில் அமைந்துள்ள காணியொன்றை சுவீகரித்தமைக்காக உடனடியாக செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டில் ஒரு பகுதியை வழங்குவதற்காக தொண்ணூறு இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட போதே குறித்த சந்தேகநபர்கள் இருவரும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களின் பிணை கோரிக்கை தொடர்பான உத்தரவு எதிர்வரும் காலங்களில் வெளியிடப்படும் என கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டுள்ளார்.

## டிஜிட்டல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்தின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார். அவர் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

டிசெம்பர் 22, 2024 அன்று 'சண்டே டைம்ஸ்' நாளிதழின் தலைப்புச் செய்தியை உங்கள் உடனடி கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். தற்போதைய ஜனாதிபதியின் இந்திய சுற்றுப்பயணத்தின்போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, டிஜிட்டல் அடையாள அட்டைகளை இலங்கையர்களுக்கு வழங்கும் உரிமம் இந்திய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் என்று அமைச்சர் விஜித ஹேரத் செய்தித்தாளிடம் தெரிவித்திருந்தார் என்று அந்தச் செய்தி கூறியது.

அமைச்சரின் அறிக்கையின்படி, இந்த ஒப்பந்தம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையை ஆளும்தரப்பு 2025 ஜனவரியில் இறுதி செய்யும். இந்த ஒப்பந்தம் ஜனநாயக உரிமைகள், தேசிய பாதுகாப்பு, பொது பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் இறையாண்மைக்குத் தவிர்க்க முடியாத ஆபத்தை ஏற்படுத்துகிறது என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம். ஒரு இந்திய நிறுவனத்திடம் டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்க அனுமதித்த வரலாற்றை மதிப்பாய்வு செய்வது மிகவும் முக்கியமானது.

ஜனவரி 28, 2022 அன்று, புதிய டிஜிட்டல் அட்டை ஒன்றைத் தயாரிப்பதற்காக கோட்டாபய ராஜபக்ச கையொப்பமிட்ட அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து ஏற்றுக்கொண்டதன் மூலம் இந்திய நிறுவனங்களுக்கு டிஜிட்டல் அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தங்களை வழங்கும் நடவடிக்கைகள் தொடங்கின.

அதன் பிறகு, 2023 மே 8 ரணில் --ராஜபக்ச அரசு 'டெண்டர்' கோரியது, இந்த 'டெண்டருக்கு' இந்திய நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என்ற நிபந்தனை இருந்தது. இத்திட்டத்திற்காக 41.09 பில்லியன் இலங்கை ரூபாய் செலவிடப்படவுள்ளதுடன், அதில் 22.33 பில்லியன் ரூபாயை இந்தியாவிடமிருந்து வழங்குவதாக இலங்கை உறுதியளித்துள்ளது. இலங்கை மக்களின் தரவுகளைப் பெறுவதற்கு இந்தியா மிகக் குறைந்த பணத்தையே செலவிடுகிறது. 2023ல் இந்த 'டெண்டரு'க்கான ஏலத்தை இரண்டு இந்திய நிறுவனங்கள் மட்டுமே சமர்ப்பித்தன. அவை 'மெட்ராஸ் செக்யூரிட்டி பிரிண்டர்ஸ்' மற்றும் 'புரோட்டீன் டெக்னாலஜிஸ்' ஆகியனவாகும்.

இதற்கிடையில், தவறுதலாக தடை செய்யப்பட்ட 'மெட்ராஸ் செக்யூரிட்டி பிரிண்டர்ஸ்' நிறுவனத்திற்கு டெண்டர் விடப்பட இருந்தபோது, எதிர்ப்புக் காரணமாக 'டெண்டர்' நிறுத்தப்பட்டது. பின்னர், ரணில் விக்ரமசிங்கே ஆளும்தரப்பு புதிய டெண்டர்களை அழைக்கவும், தரவு கையகப்படுத்தும் அதிகாரத்தை இந்தியாவுக்கு வழங்க மற்றொரு இந்திய நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கவும் முயன்றது. ஆனால், எதிர்ப்புக் காரணமாக அந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை. ஆனால் 2024 பெப்ரவரி முதல் நாளுடன் இந்த விடயத்தில் இந்தியாவின் செல்வாக்கு முடிவடையாது எனத் தெரியவந்துள்ளது,

இலங்கையின் தற்போதைய தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக 'பயோமெட்ரிக்' அம்சங்களுடன் கூடிய இலத்திரனியல் அட்டை ஒன்று மாற்றப்படும் என இலங்கையில் உள்ள இந்திய உயர்ஆணையர் சந்தோஷ்ஜா தெரிவித்தார். இந்திய நிறுவனம் அடையாள அட்டை வழங்குவதற்கான 'டெண்டரைப்' பெறமுடியும். கடந்த முறை தடவைகளும் அழைக்கப்பட்ட டெண்டரில் சிக்கல்கள் இருந்தன, ஆனால் ஆண்டின் நடுப்பகுதியில் ஏதாவது செய்யப்படும் என்று அவர் கூறினார்.

இலங்கையில் தேசிய அடையாள அட்டைகளை வழங்குவது மற்றும் அது தொடர்பான அரச கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய உயர்ஆணையர் எவ்வாறு இவ்வாறான அறிக்கைகளை வெளியிட முடியும்? 'டெண்டர்'களின் நேரத்தை இந்தியா தீர்மானிக்கிறதா? யாருக்கு 'டெண்டர்'கள் வழங்கப்படும்? என்ற கேள்வி எழுகிறது. சிறிதளவு பணத்தைச் செலவழித்து இலங்கை மக்களின் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை இந்திய நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கான தீர்மானம் செல்வாக்குச் செலுத்தப்பட்டதன் விளைவு என்பது இந்த உதாரணங்களிலிருந்து தெளிவாகிறது. அந்த நிறுவனங்கள் என்ன, எந்த செயல்முறை மூலம் அவை தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதை கூட அரசு விளக்கவில்லை.

உலகில் எந்த ஒரு நாடும் இந்த வகையில் வெளிநாட்டில் உள்ள மக்களின் தரவுகளை வைத்திருக்கவில்லை. நமது காலத்தில் நாடுகளை அடிபணியச் செய்யப் பயன்படுத்தப்படும் முதன்மையான ஆயுதங்களில் தகவல் மற்றும் தரவுகள் உள்ளன.

நாம் தகவல் சகாப்தத்தில் வாழ்கிறோம், ஒரு நாடு தனது மக்களின் தகவல்களையும் தரவுகளையும் வெளிநாட்டு நாட்டிற்கு வழங்குவது பெரும் ஆபத்து. வேறு ஒரு நாடு பிரிதொரு நாட்டு மக்களின் தகவல்களைப் பெறுவதன் மூலம்கூட ஒரு தேசத்தை அடிபணியச்செய்ய முடியும். அந்த மூலோபாயத் தலையீட்டை இந்தியா இன்று இலங்கையில் செய்து வருகிறது. இந்த நிலையில், இலங்கை மக்களின் பொது பாதுகாப்பு பெரும் ஆபத்தில் உள்ளது.

எனவே, இந்த நிலைமையை உன்னிப்பாகப் பரிசீலித்து, உங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்த மக்களுக்காக நிற்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனை அனுபவிக்கும் அதேவேளையில், டிஜிட்டல் அடையாள அட்டைப் பணியை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைக்கும் முடிவை உடனடியாக திரும்பப் பெறுவதற்கான முன்மொழிவு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவேண்டும். மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் புதிய அடையாள அட்டைத் திட்டத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை நீங்கள் அங்கீகரிக்குமாறும் பரிந்துரைக்கிறோம்.

இந்த விடயத்தில் உங்களது அரசியல் அணுகுமுறை நீங்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மக்களின் அபிலாஷைகளையும் உரிமைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். அரசமைப்பின் மூலம் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் இறையாண்மையைப் பயன்படுத்துவதில் உங்கள் நிலைப்பாட்டை சமூகத்திற்கு வெளிப்படுத்த இது ஒரு சந்தர்ப்பம் என்பதை நாங்கள் உங்களுக்கு நினைவூட்டுகிறோம் என்றுள்ளது.

## ஜனவரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டையில் இருந்து பதுளை வரையிலும் விசேட ரயில் சேவை திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கால அட்டவணையின் பிரகாரம், விசேட ரயில் இலக்கம் 01 - கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரை இரவு 07.40க்குப் புறப்படும். 2025 ஜனவரி 10,12,14,17,19,24,26,31 - மற்றும் 2025 பெப்ரவரி 02, 04 ஆகிய தினங்களில் இந்த நடைமுறை அமுலில் இருக்கும். அதே தினங்களில் விசேட ரயில் இலக்கம் 2 - பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி இரவு 07.40க்குப் புறப்படும்.

விசேட நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவையின் அடிப்படையில், கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறைக்கும் இடையிலான சேவையானது, அதிகாலை 05.30 மணிக்குப் புறப்படும். காங்கேசன்துறையில் இருந்து பிற்பகல் 01.50க்குப் புறப்படும்.

2025 ஜனவரி 10, 13, 14, 15, 17, 20, 24, 27, 31 - 2025 பெப்ரவரி 03, 04 வரையில் இந்தப் பயண சேவைகள் இடம்பெறவுள்ளன.

## ரஷ்யப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்கு முன்பாகவும் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களின் தாய்மாரும், வென்னப்புவவைச் சேர்ந்த தாயொருவரும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வலிந்து இணைக்கப்பட்ட நிலையில் காயமடைந்துள்ள கணவருக்காக முல்லைத்தீவைச் சேர்ந்த அவரது துணைவியாரும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டிருந்தார்.

இந்தப் போராட்டத்தில் சிவில் மற்றும் மனித

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# கோபாலபுரம் நன்நீர் மீன்பிடி மீனவர்களுக்கு வள்ளங்கள் றோட்டரி கழகத்தால் வழங்கல்





(முபீன், அபு அலா)

வறுமைக் கோட்டின் கீழ் இருந்துகொண்டு நன்நீர் மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டு வருகிற தொழிலாளிகளின் தொழிலை மேம்படுத்தும் நோக்கிலும், அவர்களின் வாழ்வாதாரத்தை இன்னும் உயர்வடையச் செய்வதற்கான வாழ்வாதார உதவித்திட்டத்தை நடைமுறைப் படுத்தி அவர்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றோம் என்று றொட்டேரியன் கழக மாவட்ட ஆளுநர் சுசேன ரனதுங்க தெரிவித்தார்.

திருகோணமலை - கோபாலபுரம் பிரதேசத்தில் நன்நீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருகின்ற மீனவர்களுக்கு றோட்டரிக் கழகம் நிறுவனத்தால் வள்ளம் வழங்கி வைக்கும் நிகழ்வு கோபாலபுரம் மகளிர் சங்கத் தலைவி திருமதி எஸ்.நிஹாரா தலைமையில் கோபாலபுரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக றோட்டரிக் கழக மாவட்ட ஆளுநர் சுசேன ரனதுங்க கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த வாழ்வாதார உதவித்திட்டத்தை சுழற்சி முறையில் நடைமுறைப்படுத்தி அவர்களுக்கான உதவிகளை வழங்கி வருகின்றோம் என்றும் அதன் முதற்கட்டமாக 10 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வல்லங்களை வழங்கி வைத்துள்ளோம். இதில் விடுபட்ட மீனவர்களுக்கு அடுத்தகட்ட நடவடிக்கையின்போது அவர்களுக்கும் வல்லங்கள் வழங்கி வைக்கப்படும்என்றும்அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில்திருகோணமலைறோட்டரி கழகத் தலைவர் எஸ்.ஜெகதீஸ்வரன், திட்டப் பொறுப்பாளர் எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட நன்நீர் மீன்பிடிச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட நால்வர் வாழைச்சேனையில் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிறந்துறைச்சேனை மற்றும் ஓட்டுமாவடி ஆகிய பிரதேசங்களில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட நால்வர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை யினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அதன்படி, பிறந்துறைச்சேனையில் 12 கிராம்500மில்லிக்கிராம்ஹெரோயினுடன் ஒருவரும் ஓட்டுமாவடியில் 2 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இருவரும் போதை மாத்திரையுடன் ஒருவரும் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ராணுவ தளபதி லசந்த ரொட்ரீகோ ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபாடு

இலங்கையின் 25 ஆவது இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ பதவி ஏற்பின் பின் கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிர்வாதம்பெற்றுக்கொண்டார்.

இந்த விஜயம் திங்கட்கிழமை இடம்பெற்றது.





தலதா மாளிகையின் தியவடன நிலதே பிரதீப் நிலங்க தேல அவரை வரவேற்றார்.

அதேநேரம் ஸ்ரீதலதா மாளிகைக்கு வழிபாட்டிற்காக வருகை தந்திருந்த வெளிநாட்டு யுவதி ஒருவர் இராணுவத் தளபதி சல்யூட் அடித்து மரியாதை தெரிவித்துஅங்குகுழுமிஇருந்தவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

# முதிரமுன் நெல் அறுவடையில் கிளிநொச்சி வாழ் விவசாயிகள்

கிளிநொச்சிமாவட்டத்தில் இம்முறை 70000 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்ட நிலையில் வெள்ள அனர்த்தத்தால் வயல் நிலங்கள் பாதிக்கப் பட்டிருந்தன.

தற்போது கபில நிறத்தத்தி மற்றும் மடிச்சுக்கட்டி நோய்த்தாக்கம் அதிகரித்த நிலையில் நெல்லு பூரணமாக முதிர்வடையாத நிலையில் அறுவடை செய்ய ஆரம்பித்துள்ளனர்.

விவசாயிகள் எஞ்சி இருக்கின்ற நெல்லையாவது காப்பாற்றும் நோக்குடன்தாம் அறுவடை ஆரம்பித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித் துள்ளனர்.

கடந்த போகங்களிலும் நோய்த்தாக்கம் காரணமாக விளைச்சல் குறைவடைந்த நிலையில் இம்முறையும் தாம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

கடந்த கால போகத்திலும் ஓர் ஏக்கருக்கு 5-8 மூடைகளே அறுவடை செய்ய முடிந்ததாக விவசாயிகள்தெரிவிக்கின்றனர்.





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய அரசமைப்புக்கான பணியை விரைவுபடுத்துக

ஜனநாயக ஆட்சியை உறுதி செய்வதற்கும் ஊழலை திறம்பட எதிர்த்துப் போராடுவதற்கும் உடனடியாக புதிய அரசமைப்பொன்றை உருவாக்க வேண்டும் என கர்தினால் மெல்கம் ரஞ்சித் வலியுறுத்தியுள்ளார். சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவைச் சந்தித்துப் பேசியபோது அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்

”கடந்த 70 வருடங்களில் ஒழுக்கம் மற்றும் மக்களின் எதிர்பார்ப்பு என்பன சிதைந்து போயுள்ளன. அதனை மீண்டும் சமூகத்தில் கட்டியெழுப்ப வேண்டிய பெரும் கடப்பாட்டினை ஆளும்தரப்பு கொண்டுள்ளது.தற்போது ஆளும்தரப்பு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்ற போதிலும் 70 வருட கால ஊழலை ஒழிப்பதற்கு இன்னும் கால அவகாசம் தேவைப்படுகிறது.

ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் ஊழல் மற்றும் ஏப்ரல் 21 தாக்குதல் போன்ற தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வு காண வலுவான விசாரணைப் பொறிமுறை அவசியாகும்.

அதன்படி, தற்போதுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் உறுதியான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கும் மிக விரைவில், காலம் தாழ்த்தாது புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டியது அவசியம்” என்று கர்தினால் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பை விரைவாகக் கொண்டுவரும்படி கர்த்தினால் வலியுறுத்துவது இது இரண்டாவது சம்பவம். இதற்கு முன்னர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் வலியுறுத்தியிருந்தார். மக்கள் ஆளும் தரப்பு மீது அதிருப்திகொள்வதற்கு முன்பாக புதிய அரசமைப்பைத் தயாரித்துவிடுவது முக்கியம் என்று அவர் வலியுறுத்தியிருந்தார்.

”ஆளும்தரப்பு வெறுமனே பேசிக்கொண்டிருக்காமல் தமிழ் மக்களது அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு புதிய அரசமைப்புக் கொண்டு வரப்படவேண்டும். அது வெறுமனே சிங்கள மக்களது பிரச்சினையைத் தீர்ப்பதாக இல்லாது புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

புதிய அரசமைப்பு மக்கள் மத்தியில் வாக்கெடுப்புக்கும் விடப்படவேண்டும். அவ்வாறு விடப்பட்டால்தான் அது நிறைவு பெறும். மக்கள் மத்தியில் சென்று அதற்கான ஆதரவைத் திரட்ட வேண்டுமாக இருந்தால் இந்த ஆளும்தரப்பு விரைவாக புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். அப்போதுதான் அது சாத்தியமாகலாம். காலம் செல்ல ஆட்சியின் மீதும், ஆட்சி அதிகாரம் மீதும் பல்வேறு குறைகள் வரும். அதற்கு முன்பாக அரசமைப்பு வரவேண்டும் என விருப்புகின்றோம்” என்று அவர் தெரிவித்திருந்தார்.

பல்வேறு தரப்புக்களிலும் புதிய அரசமைப்புத் தொடர்பான ஆர்வத்துடனான எதிர்பார்ப்பு இருந்தாலும் அதனைக் கொண்டுவருவதற்கு ஆளும் தரப்பு முனைப்புக் காட்டுவதாக இல்லை. புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கப்படும் என்று அரசுத் தலைவர் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் வாக்குறுதி வழங்கி அதற்கான மக்கள் ஆணையைப் பெற்றிருந்தபோதும் உடனடியாக அந்த நடவடிக்கையில் இறங்கும் முனைப்பில் ஆளும்தரப்பு ஈடுபடுவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை. பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பது மற்றும் டிஜிட்டல் மயமாக்குதல் போன்றவற்றில்தான் ஆளும்தரப்பின் கவனம் குவிக்கப்பட்டுள்ளது என்பதை அரசுத் தலைவரின் அண்மைய செய்தி உறுதிப்படுத்தியது. ஆனால், சமாந்தரமாக புதிய அரசமைப்பு முயற்சிகளும் தொடங்கப்படவேண்டும் என்பதைத்தான் கர்தினாலும் சுரேஸ் பிரேமச்சந்திரனும் வலியுறுத்துகிறார்கள்.

அது நியாயமானதும்கூட, இலங்கை மக்கள் அனைவருக்குமான, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய புதிய அரசமைப்பு ஒன்றே புதிய இலங்கைக்கும் அதன் பொருளாதாரத்திற்குமான அடிநாதமாக இருக்கமுடியும். எனவே விரைவாக புதிய அரசமைப்புப் பணிகளை ஆளும்தரப்பு விரைவாகத் தொடங்கவேண்டும்.

# இலங்கை அரசியல்: 5 என்ற எண்ணில் முடியும் ஆண்டுகளின் தாக்கம்

**உபுல் யோசப் பெர்னான்டோ**

இலங்கையில், 5 என்ற எண்ணில் முடிவடையும் ஆண்டுகள் பெரும்பாலும் அசாதாரண அரசியல் நிகழ்வுகள் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தது. அதன்பின்னர், 1955 என்பது 5 என்ற எண்ணில் முடிவடையும் அத்தகைய முதல் ஆண்டாகும், அதுமட்டுமல்ல இலங்கையின் அரசியல் பரப்பில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய ஆண்டாகவும் அமைந்தது. 1953ஆம் ஆண்டு ஹர்த்தாலுக்குப்பின்னர் அதிகாரத்தைப்பிடித்த பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலவிற்கு 1955ஆம் ஆண்டு அவரது பதவிக் காலத்தின் கடைசி ஆண்டாகும்.



1955களில், கொத்தலாவலவுக்கு எதிராக சிங்கள பௌத்த உணர்வு பெரும் அலையாக எழுந்தது. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், கொத்தலாவலவுக்கு முன்னர் பிரதமராக இருந்தவரான டட்லி சேனாநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, இந்த வளர்ந்து வரும் சிங்கள பௌத்த இயக்கத்தை ஆதரித்ததுதான். இருப்பினும், அந்த ஆண்டு கொத்தலாவலவுக்கு மிகவும் சவாலான ஆண்டாக அமைந்தது.

அவருக்குப் பலமுனைகளில் இருந்து எதிர்ப்பு வந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, இடதுசாரித் தலைவர்களான என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, கலாநிதி விக்கிரமசிங்க மற்றும் டட்லியின் ஐ.தே.க. என்பன இணைந்து கொத்தலாவலயை இலக்கு வைத்தன. எல்லாத் தரப்புகளில் இருந்தும் அவருக்கு அழுத்தங்களை ஏற்படுத்தின.

1956 இல், பெரும் அழுத்தத்தின் கீழேதான் கொத்தலாவல பொதுத்தேர்தலில் போட்டியிட்டார், தோல்வியைடந்தார். இது இறுதியில் அவர் அரசியலில் இருந்தும் நாட்டிலிருந்தும் வெளியேறுவதற்கு வழிவகுத்தது.

ஐந்து என்ற எண்ணில் முடிந்த அடுத்த முக்கிய ஆண்டு, 1965. அதற்கு முந்தைய 1964ஆம் ஆண்டில், அப்போதைய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சிறீமாவோ பண்டாரநாயக்க மற்றும் தேசிய இயக்கத்தின் கூட்டணி ஆட்சியை வீழ்த்தியது. அதன் விளைவாக 1965இல் பொதுத் தேர்தல் வந்தது. டட்லியின் ஐக்கிய தேசியக் கட்சி அந்தத் தேர்தலில் வென்றது. ஆனால் பிரதமர் சிறீமாவோ பதவி விலக முடியாது என்றார். டட்லிக்கு பெரும்பான்மை இல்லை என்றார். அப்போது ’கவர்னர் ஜெனரல்’ பதவி இருந்தது. தனது மாமாவான வில்லியம் கோபல்லவாவை ’கவர்னர் ஜெனரலாக’ நியமித்தார். சிறிமாவோ அம்மையார் பதவியைவிட்டு விலக முடியாது என்று அறிவித்ததும் ஐ.தே.கட்சியினர் பெரும் கூட்டமாக அலரிமாளிகையைச சுற்றி வளைத்தனர். பதிலடியாகத் தனக்கு ஆதரவாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரையும் மற்றும் இடதுசாரிகளையும் மக்களை அழைத்து வருமாறு அம்மையால் கேட்டுக்கொண்டார். இதனால் கோபமடைந்த வில்லியம் கோபல்லாவ தனது மருமகளான சிறீமாவோவை உடனடியாகப் பதவிவிலகுமாறு வலியுறுத்தினார்.. இத்தகைய குழப்பங்களுக்கு மத்தியில்தான் 1965இல் டட்லி பிரதமரானார்.

அடுத்தது 1975. இந்த ஆண்டில் அப்போதைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கா தனது பதவிக் காலத்தை வலுக்கட்டாயமாக இரண்டு ஆண்டுகள் நீட்டித்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தான் பிரதிநிதித்துவப்படுத்திய கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் ஜே.ஆர். இடைத்தேர்தலை நடத்துமாறு பிரதமருக்கு சவால் விடுத்தார். இந்தச் சவாலை பிரதமர் ஏற்றுக்கொள்கிறார். ஜே.ஆர் தோற்றுவிடுவார் என்றும், ஜே.ஆரின் அரசியல் அதோடு முடிந்துவிடும் என்றும் அனைவரும் நினைத்தனர். ஆனால் தததனது சவால் மூலம் ஆளும்தரப்பு அதிருவதை ஜே.ஆர். அறிந்திருந்தார், 1975 இல் பிரதமர் திருமதி பண்டாரநாயக்க ஆளும்தரப்பின் முக்கிய பங்குதாரர்களான என்.எம். பெரேரா மற்றும் கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோரை அவர்களின் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கினார். அதிலிருந்து ஆளும்தரப்பின் வீழ்ச்சி ஆரம்பமாகியது. அவரது ஆளும்தரப்பு 1975இல் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

1985இல் ஜே.ஆரின் ஆளும்தரப்புக்கு எதிராக ஒரு ஆயுதக் கிளர்ச்சி இயக்கத்திற்கான குறைந்தபட்சத் தேவைகளை ஜே.வி.பி. திரட்டியது. கொழும்பில் வடக்கில் தமிழ் ஆயுதக் குழுக்கள் குண்டுகளை வெடிக்கச் செய்து கொண்டிருந்த அதே காலத்தில், 1985 வாக்கில் ஜே.வி.பி காட்டுப்பகுதியில் ஆயுதப் பயிற்சி பெற்றது, கொழும்புப் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் தயா பத்திரன 1985இல் ஆயுத அரசியலை ஏற்பாடு செய்த பின்னர் 1986இல் கொல்லப்பட்டார். 1985ஆம் ஆண்டு ஜே.ஆரையும் ஐ.தே.க. தலைகளையும் உலுக்கிய ஆண்டு.

17 வருடங்களின் பின்னர் ஐ.தே.க. ஆளும்தரப்பை அகற்றி சந்திரிகா ஜனாதிபதியாக பதவியேற்ற ஆண்டு 1995. அவரது ஆட்சியின் முதல் ஆண்டு 1995இல் தொடங்கியது. அது எளிதானது அல்ல. வேலை நிறுத்தங்கள் எங்கும் காணப்பட்டன. ஆளும்தரப்புக்குள் நெருக்கடி ஏற்பட்டது. அவள் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் அவளால் நிறைவேற்ற முடியவில்லை.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இலங்கை அரசியல் ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

2005 சந்திரிகாவின் அரசியல் முடிவுக்கு வந்த ஆண்டு. 2005இல், அவரது சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மக்கள் முன்னணி ஜே.வி.பி.யுடன் இணைந்து ஆட்சியை அமைத்தது. 2005ஆம் ஆண்டு ஜே.வி.பி. அந்த ஆட்சியில் இருந்து வெளியேறியது. சந்திரிகா ஆதரவற்றுப்போனார். அவர் ஜனாதிபதி தேர்தலை 2006க்கு ஒத்திவைக்கத் திட்டமிட்டார். ஆனால் அவரால் அதைச் செய்ய முடியவில்லை. அப்போது எதிர்க்கட்சித் தலைவரா இருந்தவரான ரணில் தெற்கில் இருந்து பெருந்திரளான கூட்டத்துடன் ஊர்வலமாக கொழும்பு வந்தார். ஆளும்தரப்புக்குள் இருந்த சந்திரிக்காவின் நெருங்கிய அமைச்சர்கள் அவருக்கு எதிராகப் பிரதமர் மஹிந்தவுடன் இணைந்து, சந்திரிகாவை உடனடியாக ஓய்வுபெறச் சொன்னார்கள்.

2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த வெற்றிபெற்றார். நாட்டிற்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டார். 2005ஆம் ஆண்டு அயலுறவுத்துறை அமைச்சர் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதில் நாடு அச்சமடைந்தது. மஹிந்த ஜனாதிபதியானார் என்பது யாரும் எதிர்பார்க்காத ஒன்று. ஜேவிபி அவரை ஜனாதிபதியாக்கியது. 2005 நாட்டையே தலைகீழாக மாற்றிய ஆண்டு.

2015 இன்னும் சிறப்பான ஆண்டாக இருந்தது. யாராலும் தடுக்க முடியாதவர் என நம்பப்பட்ட மகிந்த ராஜபக்ச, 2015ஆம் ஆண்டு அவரது கட்சியின் செயலாளர் மைத்திரிபாலவினால் தோற்கடிக்கப்பட்டார். போரில் வெற்றி பெற்ற மஹிந்த போன்ற அரசியல்வாதி தோற்கடிக்கப்படுவார் என எவரும் நினைக்கவில்லை. 2014 டிசெம்பரில் தொடங்கிய மஹிந்த ஆட்சியின் சரிவு 2015 ஜனவரியில் பேரழிவாக மாறியது. 2015 பொதுத் தேர்தலில் ரணில் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு மஹிந்தவை தோற்கடித்தார். 2014ஆம் ஆண்டளவில் ரணிலை வீட்டுக்கு அனுப்ப ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கிளர்ச்சிகள் வெடித்தன. 2015இல் மக்கள் வாக்கு மூலம் ரணில் பிரதமரானார். 2015இல் ராஜபக்சவின் குடும்பம் சிறை சென்றது. 2015 இந்த நாட்டின் அரசியலை புரட்டிப்போட்ட ஆண்டு.

சுதந்திரத்திற்கு முந்தைய 1935 இலங்கையின் அரசியல் வரலாற்றையே மாற்றிய ஆண்டாகும். லங்கா சமசமாஜக் கட்சி 1935இல் நிறுவப்பட்டது. இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது இடதுசாரிக் கட்சி லங்கா சமசமாஜக் கட்சியாகும். லெஸ்லி குணவர்தன, என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர். டி சில்வா, பிலிப் குணவர்தன, மற்றும் ரொபர்ட் குணவர்தன ஆகியோரால் சமசமாஜக் கட்சி உருவாக்கப்பட்டது. இது 1935ஆம் ஆண்டை இலங்கையின் இடதுசாரி இயக்கத்திற்கு ஒரு வரலாற்று ஆண்டாக மாற்றியது. சரியாக 90 வருடங்களின் பின்னர் இலங்கையில் இடதுசாரி ஆட்சி ஒன்று உருவாகியுள்ளது.

அப்படிப் பார்க்கும்போது 1935–க்கும் 2025–க்கும் இடையே பெரிய தொடர்பு இருக்கிறது.1935இ–ல் தொடங்கிய இடதுசாரிகள் இன்று கரைந்துவிட்டனர். 2024இல் உருவாகும் இடதுசாரி அரசு இடதுபக்கம் போகுமா அல்லது வலது பக்கம் போகுமா என்பது 2025இல் முடிவு செய்யப்படும்.

1935 மற்றும் 1945 மறக்க முடியாத ஆண்டுகள். 1945 ஆம் ஆண்டு முன்னாள் கல்வி அமைச்சர் சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா இலவசக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார். ஜனாதிபதி அநுரகுமார புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்த 5 என்ற எண்ணில் முடிவடையும் 2025ஆம் ஆண்டு அமையும்.

1935 இடதுசாரி இயக்கத்தின் ஆரம்பம். 1945 இலவசக் கல்வியின் ஆரம்பம். 1955 பிராமண சாதியின் சரிவு. (சேர் ஜோன் மற்றும் யூ.என்.பி.யின் வீழ்ச்சி). 1965 இல் ஒரு பிரபலமான ஆட்சியின் வீழ்ச்சியடைந்தது. 1975 பண்டாரநாயக்காவின் வீழ்ச்சி. 2005 ராஜபக்சக்களின் எழுச்சி. 2015 ராஜபக்சக்களின் வீழ்ச்சி. எனில் 2025...?

# கொழும்பு பல்கலைகழக செயற்பாடுகள் சர்வமத தலைவர்கள் ஆசியுடன் ஆரம்பம்



கொழும்பு பல்கலைக்கழக கல்வி பீடத்தின் 50 வருட கொண்டாட்டம் கடந்த தை மதம் முதலாம் திகதி சர்வமத பிரார்த்தனைகளுடன் ஆரம்பமானது. கல்வி பீடத்தின் தலைவர் கலாநிதி கபில பண்டார தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் குணரத்ன மற்றும் வாழ்நாள் பேராசிரியர் மாரிபெரேரா சிறப்புரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் பௌத்த குரு சிரேஷ்ட பேராசிரியர் இந்துராகரே டம்மரத்தின தேரர், இந்து குரு சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா, இஸ்லாமிய மத குரு கலாநிதி ஹபிஸ் மற்றும் கிறிஸ்தவ மத குரு சிரேஸ் இமானுவேல் ஆகியோரும் ஆசீர்வாதம் வழங்கினர்.

# குடத்தனை தனியார் நிறுவனத்தில் திருடிய சந்தேகநபர் ஒருவர் கைது

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் மருதங்கேணி பொலிஸாரால் ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி - குடத்தனை, மாளிகைத்திடல் பகுதியை சேர்ந்த நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் நிறுவனம் ஒன்றின் சொத்துக்கள், ஆவணங்கள், தொலைபேசி மற்றும் ஒரு தொகை பணம் என்பவற்றை திருடிய குற்றச்சாட்டின் பேரிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ய சென்ற போது சந்தேக நபர் பொலிஸாரை தாக்கி தப்பிச்செல்ல முயன்றுள்ளாரெனபொலிஸார் தெரிவித்தனர்.

பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபரை மருதங்கேணி பொலிஸார் தடுத்துவைத்து விசாரணைக் குட்படுத்தி வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது பிரதேச சமூக அபிவிருத்தி பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(ஸாகிர்)

சாய்ந்தமருது பிரதேச சமூக அபிவிருத்தி அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்சாய்ந்தமருதுறியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

அமைப்பின் முன்னாள் தலைவர்ஐ.ஜாபிர்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், 2025 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.



இத்தெரிவில் அமைப்பின் செயலாளராக ஏ.ஆர்.நர்மிலா தெரிவானார். தலைவராக மீண்டும்ஐ.ஜாபிர்தெரிவுசெய்யப்பட்டார். மற்றும் பொருளாளராக எம். மஹ்தியா தெரிவானதோடு, உப தலைவராக எம்.எஸ்.எம். அக்ரம், உபசெயலாளராக ஏ.காமிலா, மற்றும் அமைப்பின் ஆலோசர்களாக எம்.ஐ. வதுர்தீன் (கப்பல் துறை அதிகார சபை), ஏ.எல்.எம். நூர்தீன், எம்.ஏ.சி. பாயிஸ் கரீம், ஏ.எஸ்.எம். நௌசாட், எம்.ஐ. சம்சுதீன், யூ.எல். சத்தார் மற்றும் இணைப்பாளராக எம். றிபானா, அமைப்பாளராக ஏ.ஏ.கபூர், ஊடக இணைப்பாளராக எம்.ஐ.சம்சுதீன், அறிவிப்பாளராக ஏ.ஆர்.எம். நௌபீர், கணக்காய்வாளர்களாக ஏ.அஸ்மியா, எம். றிப்கா மற்றும் ஏ.எம். நவாஸ், ஐ.




பாரிசா, ஏ.எல். முபிதா, எம்.எம்.பாத்திமா பானு, பி.ஐ. ஹமிதா, எம்.எஸ். ஜிப்ரியா, ஏ.ஜனுபா, ஏ.எல். றஃமான், கே.எம்.றபீக், எஸ்.எல்.ரஷீட் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.



இந்நிகழ்வில் அமைப்பின் அமைப்பாளர் ஏ.ஏ.கபூர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோர் உட்பட அதிதிகளையும் படங்களில் காணலாம்.

# நாடாளுமன்ற தேநீர் விருந்தின் செலவு விவரம் குறித்து விளக்கம்

பாராளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்தின் உண்மையான செலவு என்ற தலைப்பில் 2024.12.29 ஆம் திகதி ஞாயிறு சிங்களமொழிப்பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பில் பாராளுமன்றம் விளக்கம் அளித்துள்ளது.

பாராளுமன்ற செலவுத் தலைப்பின் கீழ் சம்பிரதாயமாக நடத்தப்படும் நிகழ்வுகள் மற்றும் தேநீர் விருந்துபசாரத்திற்காக ஒன்பதாவதுபாராளுமன்றத்தின்முதலாவது நாள் அமர்வில் 287,340 ரூபாவும், பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்துபசராத்திற்கு 339,628.55 ரூபாவும் செலவு செய்யப்பட்டிருப்பதாக குறித்த ஊடகச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பம் 2020.08.20ஆம் திகதியும், பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பம் 2024.11.21ஆம் திகதியும் இடம்பெற்றன.

இதற்கு அமைய ஒன்பதாவது பாராளுமன்றம் மற்றும் பத்தாவது பாராளுமன்றத்தின் முதல்நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்துபசாரங்களுக்கான செலவுகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களினால் வேறுபடுகின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

ஒன்பதாவது மற்றும் பத்தாவது பாராளுமன்றங்களின் முதல்நாள் அமர்வுகளுக்கிடையில் 4 வருட கால இடைவெளி காணப்படுகின்றது.

இக்கால இடைவெளியில் சந்தையில் ஏற்பட்ட விலை ஏற்ற இறக்கங்கள் விருந்துபசாரத்துக்கான செலவுகள் உள்ளிட்ட ஏனைய செலவினங்கள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாக அமைந்தது.

இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவினால் பொருட்கள்மற்றும்சேவைகளின்விலைகள் அதிகரித்தமையால்உணவுப்பொருட்களைத் தயாரிப்பதற்கான செலவுகள் 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் அண்ணளவாக 100 வீதத்தினால் அதிகரித்துள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

மேலும், இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள்மாத்திரமன்றி,இராஜதந்திரிகள், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள், அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மற்றும் நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் என நாடாளுமன்றம் விளக்கமளித்துள்ளது.

# பாடசாலைகளின் சுற்றுவேலிகளை நாசம் செய்த காட்டு யானைகள்

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள வெள்ளிமலைப் பிள்ளையார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் அதன் அருகில் அமைந்துள்ள பாலர் பாடசாலை ஒன்றினுள் காட்டுயானைகள் புகுந்து அங்குள்ள சுற்று வேலிகளை நாசம் செய்துள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரதீவு பற்று பிரதேசத்தில் மிக நீண்ட காலத்திலிருந்தே இவ்வாறு காட்டுயானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன என அக்கிராம மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப்பகுதியிலுள்ள, வெல்லாவெளி, வேத்துசேனை, காக்காச்சிவட்டை, விவேகானந்தபுரம், தும்பங்கேணி, திக்கோடை, களுமுந்தன்வெளி, உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காட்டுயானைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் அமைந்துள்ள தளவாய் காட்டினை அண்மித்த சூழலில் சுமார் 30 இற்கு மேற்பட்ட காட்டுயானைகள் அலைந்து திரிவதால் இரவு வேளைகளில் யானைகள் கிராமங்களுக்குள் உட்புகுந்து வீடுகளையும். பாடசாலைகளும், பயிரிணங்களையும் நாசம் செய்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாணை வெடிகளை வைத்து யாணைகளை விட்டினாலும் காட்டுயானைகளின் அட்டகாசம் குறையாதுள்ளதால் காட்டு யானைகளை உடனடியாக தமது பகுதியிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சர்வ மதத் தலைவர்களிடம் ஆசிபெற்றார் சபாநாயகர்

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன கடந்த சனிக்கிழமை வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்று வழிபட்டு ஆசிகளைப் பெற்றுக்கொண்டார். இந்த வழிபாட்டில் தியவடன நிலமே நிலங்க தேல பண்டாரவும் இணைந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து மல்வத்து மகா விகாரைக்குச் சென்ற சாபாநாயகர் மல்வத்து பீட மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கள தேரரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் சபாநாயகர் கண்டி ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதன் பின்னர் ஞாயிற்றுக்கிழமை சபாநாயகர் தெவட்டகஹ பள்ளிவாசலுக்குச் சென்று மதத் தலைவர்களைச் சந்தித்ததுடன், அதனைத் தொடர்ந்து கொழும்பு மறை மாவட்ட ஆயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையையும் சந்தித்து ஆசி பெற்றார்.





காலைக்கதிர்
Kalaikkathir

# ஈழத்தமிழர் பிரச்சியைத் தீர்ப்பதற்கான நல்லெண்ண சமிக்ஞையை தேசிய மக்கள் சக்தி வெளியிடவில்லை

## குமார்பொன்னம்பலம் நினைவுப்பேருரையில் தெரிவிப்பு

ஈழத்தமிழர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஓர் ஆக்கபூர்வமான அல்லது மனச்சுத்தியுடனான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அறிகுறிகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என பேராசிரியர் ரகுராம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை மாமனிதர் குமார் பொன்னம்பலம் நினைவுப்பேருரையை ஆற்றிய பேராசிரியர் ரகுராம் இதனை தெரிவித்துள்ளார்.

இன்றைக்கு எங்களின் மிக முக்கியமான பிரச்சினைகளாகயிருக்கின்றவலிந்து காணாமலாக் கபட்டோர்,தொடர்பான நிலை, படைகளிடம் கையளிக்கப்பட்டோர் தொடர்பான நிலை, பற்றிய வெளிப்படையான பிரகடனம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினாலே வெளிப்படுத்தப்படவேண்டும்.

இன்றைக்கு மீதமாகவுள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்.பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என தெரிவித்துள்ள பேராசிரியர் ரகுராம் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருந்தபோது கொழும்பிலிருந்து குமார் பொன்னம்பலம் ஆற்றிய பணிகள் மாத் திரமல்ல,போராட்டம் முன்னெடுக்கப்படுகின்ற ஆரம்ப காலகட்டங்களிலும், அந்த போராட்டத்தினுடைய நேர்மையை தாற்பரியத்தை உணர்ந்தவராக அவர் ஆற்றிய பணிகளும் எடுத்த முடிவுகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

குறிப்பாக அவர் படுகொலை செய்யப்படு வதற்கு முன்பாக கொழும்பிலே விடுதலைப் போராட்டத்தைமிகநியாயத்துடன்உச்சகுரலிலே எடுத்துச்சொல்லி,அந்த நியாயத்தை உலகெங்கும் பரப்புவதற்கும் விடுதலைப்போராட்டத்திற்கு தன்னால் இயன்ற தார்மீக அந்தஸ்த்தை பெற்றுதருவதிலும் அவர் முனைப்புடன் செயற்பட்;டுள்ளார்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் நாங்கள் வன்னிப்பகுதியில் ஊடகத்துறையில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது,அவருடைய பேச்சுக்கள் அவர் அளிக்கின்ற விளக்கங்கள் எல்லாம் எமக்கு கிடைக்கின்ற போது அவரை பற்றிய மிகப்பெரிய பிரமிப்பு எங்களிற்கு ஏற்பட்டது.

சாதரணமாகஅரசியல்வாதிகள்தமிழ்தலைவர்கள் என சொல்லப்படுபவர்கள் அவ்வாறான சூழலிலே எப்படி செயலாற்றவேண்டும் எப்படி தங்கள் குரல்களை வெளிப்படுத்தவேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக குமார்பொன்னம்பலம் விளங்கினார்.

உண்மையில் இன்று மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவுப்பே ருரையை ஆற்றுவதற்கு எனக்கு அழைப்பு கிடைத்தபோது.எனக்குள் என்னுடைய வாழ்க்கையிலே முதல் தடவையாக 1982 ஆம் ஆண்டு எனது 9 வயதிலே சந்தித்த முதலாவது அரசியல்வாதி அவர்தான் என்ற நினைப்பு எழுந்தது.

திருகோணமலையிலே எங்கள் குடும்பம் வாழ்ந்துகொண்டிருந்தபோது 82 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக அவர் திருகோணமலைக்கு வந்திருந்தார்.

அப்போதுதான் அவரை நான் முதலில் பார்த்தேன். எனது வாழ்க்கையில் நான் கண்ட முதலாவது அரசியல்வாதி அவர்தான்.அப்படி அறிமுகத்தை தந்தவரின் 25 ஆவது ஆண்டு நினைவுதினத்தில் உரையாற்ற வாய்ப்பு கிடைத்த காலப்பொருத்தத்தை நான்



எண்ணிப்பார்க்கின்றேன்.

இன்று மாமனிதர் குமார் பொன்னம் பலத்தின் நினைவுகளை நாங்கள் மீட்டுக்கொண் டிருக்கின்றபோது,அவர்தனது பிரதிநிதித்துவத்தை, ஒரு போராட்டம் மிக வேகமாகதியாகங்களுடன் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது பொதுமகனாகயிருந்துமக்கள்பிரதிநிதியாகயிருந்து தனது கடமைகளை செய்தார் என்பதை இன்றைக்கு இந்த வரலாற்று சந்திப்பிலே இன்றைய பொழுதுகளில் நாங்கள் மீட்டிப்பார்க்கவேண்டியுள்ளது.

அந்த வகையிலேதான் எனது நினைவுப்பேருரையை மக்கள் மயப்படுத்த வேண்டிய அரசியல் என்ற தலைப்பிலே நான் நிகழ்த்தவுள்ளேன்.

இந்த நினைவுப்பேருரையிலே ஐந்து விடயங்களை நான் முக்கியமாக தொட்டுச்செல் லலாம் என நான் நினைக்கின்றேன்.

ஒன்று தமிழ் மக்களுடைய ஈழத்தமிழ் மக்களுடையஅடிப்படை கோரிக்கைகள்,அவற்றை பற்றிய புரிதல்கள் எண்ணக்கருக்கல் முதலாவதாகவும்,

இரண்டாவது எங்களிற்கு தற்போது பேசுபொருளாக மாறியிருக்க கூடிய அரசியலமைப்பு நகல்வடிவத்தில் காணப்படும் பிரச்சினைகள் பற்றியும்,இதற்கு மாற்றாக நாங்கள் முன்னெடுக்கப்படுவதாக பரிந்துரைத்து ,பார்க்ககூடிய தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு திட்டம் அது பற்றிய கரிசனைகள் குறித்தும்.

எவ்வாறு இருந்தாலும் இன்றைய பொழுதுகளில் ஈழத் தமிழர்களின் மக்களின் பிரச்சினைகளை பேசுவதற்கு ஆட்சியில் இருக்ககூடிய தேசிய மக்கள் சக்தி,ஜேவிபியின் பார்வை அவர்களுக்கு

ஊடாக நாங்கள் பெறக்கூடிய சாத்தியங்கள் குறித்தும்,அதன் ஊடாக மக்கள் மயப்படுத்தவேண்டிய ஈழத்தமிழர் அரசியலை ,தேர்தல்களிற்கு அப்பால், அரசியல் கட்சிகளிற்கு அப்பால் கட்டமைக்கப்படவேண்டிய அரசியலை,பற்றி பேசுவதாக எனது இறுதி பகுதியும் அமைந்திருக்கும்.

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளிற்கானஅடிப்படை கோட்பாடுகளை நாங்கள் இந்த கட்டத்திலே நினைவில் நிறுத்திக்கொள்ளவேண்டிய ஒரு கடப்பாட்டில் இருக்கின்றோம்.

இன்றைக்கு புதிய அரசாங்கம் பதவியேற்று அதிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெற்றிருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலிலே மிகக்கணிசமான வாக்குகளை பெற்று ஆட்சி அமைக்கப்பட் டுள்ளது.இவ்வாறான பின்னணியிலே நீண்டு தொடரும் எங்களுடைய பிரச்சினையை எங்களுடைய போராட்ட வரலாற்றின் தீர்வை நோக்கி நாங்கள் நகரவேண்டுமாகயிருந்தால்,அந்த தீர்விற்காக கொழும்பிலிருந்து வெளிப்படுத்தப் படவேண்டிய சமிக்ஞைகள் குறித்து நாங்கள் மிக கவனமாகயிருக்கவேண்டும்.

வெறுமனே எங்களது கோரிக்கைகளை அபிலாசைகளை நாங்கள் தன்னியல்பாக முன்வைப்பதைவிட,அவ்வாறான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதற்கான கவனத்தில் எடுக்கப்படுவதற்கான ஏதுநிலைகளை கொழும் பிலிருந்து அறிகுறிகளாக சமிக்ஞைகளாக எதிர்பார்த்திருக்கவேண்டிய இடத்திலிருக் கின்றோம்.

இன்றைக்கு பதவியேற்றிருக்ககூடிய தேசிய மக்கள் சக்தி மிகவும் வலுவான கட்டத்திலிருந்தாலும் கூட கொழும்பிலிருந்து கிடைக்ககூடிய செய்திகள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது வலுவான பிரதிநிதித்துவம் ஊடாக எதனை சாதிக்கப்போகி;ன்றது என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டேயுள்ளது.

கட்டமைப்பு மாற்றத்தை முன்வைத்து வந்த அரசாங்கத்தினால் அந்த கட்டமைப்பு மாற்றத்தை முழுமையாக எடுத்துச்செல்ல முடியுமா கட்டமைப்பு மாற்றத்தை மேலிருந்து கீழாக எடுத்துச்செல்ல முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மிகக்குறைந்த காலப்பகுதி தான்அவர்களிற்கு வழங்கப்பட்டுள்ளது அவர்கள் தங்கள் போக்கினை அல்லது நிருபிக்கவேண்டிய காலப்பகுதி என்பது ஒப்பீட்டளவில் குறுகியது என நாங்கள் சொல்லிக்கொள்ளலாம்.

ஆனால் அரசியல் வாழ்வு என்பதும் கடந்தகாலத்தில் ஸ்ரீலங்காஅரசாங்கத்தை ஆண்டுகொண்டிருந்தவர்கள் விட்டுச்சென்ற பாதைகளில்இருந்து மிகவித்தியாசமானவர்களாக அவர்கள் தங்களை காட்டவேண்டிய தேவையிருப்பதைவைத்துபார்க்கும்போதும்,இந்த நாட்கள் மிக முக்;கியமானவையாக உள்ளன.

தனியே தமிழ்மக்கள் மத்தியில் மாத்திரம் அல்லாது தெற்கிலிருந்தும் மிகப்பெரிய எதிர்பார்ப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது குவிந்திருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீதான அதீத எதிர்பார்ப்பு தான் அவர்களிற்கான பெரிய அச்சமாகவும் இன்று மாறிவருகின்றது.

ஓர் எதிர்பார்ப்பு என்பது அதி உச்ச அளவிலே இருக்கும்போது,அந்த எதிர்பார்ப்பை எப்படி திருப்தி செய்து கொள்வது என்பதிலே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு முனைப்பான முன்நகர்வை எடுத்து வருவதாக இன்னமும் உறுதிப்படுத்தக்கூடிய தடயங்கள் எங்களிற்கு கிடைக்கவில்லை.

அவ்வாறான பொழுதிலே ஆகக்குறைந்தது ஈழத்தமிழர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஒரு அரசியல் நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டும் முயற்சிகளை நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

இதுவரைக்கும் அவ்வாறான முயற்சிகள் எங்கள் கண்களிற்கே எங்கள் அறிவுபுலத்திற்கோ தெரிவதாக கிடைக்கப்பெறவில்லை.

குறிப்பாக ஈழத்தமிழர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஒரு ஆக்கபூர்வமான அல்லது மனச்சுத்தியுடனான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அறிகுறிகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும்.

இன்றைக்கு எங்களின் மிக முக்கியமான பிரச்சினைகளாகயிருக்கின்ற வலிந்து காணாமலாக்கபட்டோர்,தொடர்பான நிலை, படைகளிடம்கையளிக்கப்பட்டோர்தொடர்பான நிலை,பற்றிய வெளிப்படையான பிரகடனம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினாலே வெளிப்படுத்தப்படவேண்டும்.

இன்றைக்கு மீதமாகவுள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்.பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## ரஷ்யப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் செயற்பாட்டாளர்களான ஷெரீன் சரூர், சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம், ராஜ்குமார் ரஜீவ்காந் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி செயலக பாதுகாப்பு பிரிவின் பிரதானி போராட்டத்துக்கான காரணத்தினைக் கேட்டறிந்ததோடு, ஜனாதிபதியின் பொதுமக்கள் தொடர்பாடல் பணிப்பாளரான கமகேவுடனான அவர்களுக்குச் சந்திப்பொன்றையும் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் டிசெம்பர் 2 கையளிக்கப்பட்ட குறித்த விடயம் சம்பந்தமான கடிதத்துக்கு உரிய பதில்கள் கிடைக்காத காரணத்தினாலேயே போராட்டத்தில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டதாக போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அச்சமயத்தில் குறித்த விடயம் வெளிவிவகார அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதோடு அந்த அமைச்சே விடயத்தினைக் கையாள்வதாகவும் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது. அவ்விடயம் சம்பந்தமாக தாங்கள் விரைந்து நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சிகளை எடுப்பதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

அத்துடன், வென்னப்புவவில் இருந்து வருகை தந்திருந்த தயாராரின் மகன் ஏற்கனவே இராணுவத்தில் கடமையாற்றிய பின்னர் வெளியேறி ரஷ்ய இராணுவத்தில் இணைந்தவர் என்பதும் அவர் தற்போது காணாமல்போயுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டது. இதனையடுத்து அவ்விடயத்தினை பிறிதாகத் தாம் கையாள்வார் என பணிப்பாளரால் உறுதியளிக்கப்பட்டது.

இதனையடுத்து, போராட்டக்காரர்கள் வெளிவிவகார அமைச்சுக்குச் சென்று அமைச்சின் சுற்றுவட்டத்தில் பதாகைகளை தாங்கியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். இந்நிலையில், வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் வருகை தந்து போராட்டக்காரர்களின் கோரிக்கையை கேட்டறிந்ததோடு அவர்களை அமைச்சருடன் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதாக குறிப்பிட்டார்.

தொடர்ந்து வெளிவிவகார பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா போராட்டக்காரர்களை அழைத்துப் பேசினார். அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர்களுடன் ஆராய்ந்தார்.

## கடவுச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடவுச்சீட்டுக்களுக்கு மேலதிகமாக புதிய கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படவேண்டும்.

கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதில் தற்போது சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. கடவுச்சீட்டு அச்சிடும் பணிகள் புதிய நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டதை அடுத்து இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

கொள்கை ரீதியாகக் கடந்த ஆளும்தரப்பும் முன்னர் மேற்கொண்ட தவறான தீர்மானமே இந்த நெருக்கடி நிலைக்குக் காரணம். கடவுச்சீட்டுக்கான முன்பதிவுகளை மேற்கொண்டு சிலர் ஐந்து முதல் ஆறு மாதங்களாகக் காத்திருக்கின்றனர்.

இதன் காரணமாக கடவுச்சீட்டுக்களை அச்சிடுவதற்கான பொறுப்பை புதிய நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளது என்றார்.

## சித்திரைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியினர் கருத்துக்களை தெரிவித்திருந்தனர். இன்று நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டிலிருந்தே இது தெளிவாகிறது. தேசிய மக்கள் சக்திக்கும் ஜேவிபிக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் தற்போது வெளிவர ஆரம்பித்துள்ளன.

'தூய ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டத்தில் மாத்திரம் இந்த ஆளும்தரப்பு ஆர்வம் காண்பிக்கிறது. ஆனால், அரசவருமானத்தை அதிகரிப்பதற்காக வெளிநாட்டு முதலீடுகளை எவ்வாறு ஈர்ப்பதற்கான திட்டங்களில் கவனம் செலுத்தவில்லை. இவ்வாறு எந்தத் திட்டமிடலும் இல்லாததன் காரணமாகவே வாகனங்களை இறக்குமதி செய்து அதற்காக அறவிடப்படும் வரியின் மூலம் வருமானத்தை பெற முயற்சிக்கின்றது

அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வினை வழங்குவதற்கு பதிலாக அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நன்மை கிடைக்கும் வகையில் விலை அதிகரிப்பை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்.

அடுத்த புத்தாண்டின்போது ஒரு கிலோ அரிசியை 300 ரூபாய்க்கு வாங்க வேண்டிய நிலைமை நாட்டுக்கு மக்களுக்கு ஏற்படும். அதிகாரிகளின் தேவைகள் மாத்திரமே நிறைவேற்றப்படுகின்றன. மாறாக விவசாயிகளின் தேவை குறித்து இந்த ஆளும்தரப்பு எவ்வித அவதானமும் செலுத்தவில்லை.

அன்று எரிபொருள் மற்றும் மின் கட்டண சூத்திரங்களுக்குக் கடுமையான எதிர்ப்பு வெளியிட்ட தேசிய மக்கள் சக்தி, தற்போது வெட்கமின்றி கடந்த ஆளும்தரப்பின் சூத்திரங்களையே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

பொருளாதாரத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த வேலைத்திட்டங்களைத் தவிர இந்த ஆளும்தரப்பு எந்தவொரு புதிய வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை. இவ்வாறு பயணித்தால் இந்த ஆளும்தரப்பால் தொடர்ந்தும் பிரச்சினைகள் இன்றி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்றார்.

## பெருந் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத் தொழிலாளர்கள் பாதிப்பின்றி இலகுவாக தேயிலை கொழுந்து பறிப்பதற்காக இந்தக் குடை அறிமுகம் செய்யப்பட்டதாக தோட்ட அத்தியட்சகர் நதீர குணசேகர தெரிவித்துள்ளார்.

தோட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் இணைந்து முன்னோடி திட்டமாக இந்த குடை உருவாக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நடவடிக்கையின் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய குடைக்கான காப்புரிமையைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தோட்ட அத்தியட்சகர் நதீர குணசேகர தெரிவித்துள்ளார்.

## ரூ. 28 ஆயிரம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இதனிடையே, 'தூய ஸ்ரீ லங்கா' தேசிய வேலைத்திட்டத்திற்கு இணையாக இவ்வருடத்தில் இலங்கை கடற்படை தேசிய கடல்சார் அபிலாஷையை அடைவதற்கான புதிய மூலோபாயத் திட்டத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகவிருப்பதாக இலங்கை கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திசர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஏமாற்றினார் என்று திசர மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

2024 டிசம்பர் 28 மோசடி தொடர்பான முறைப்பாடு தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பிபிலை பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

பின்லாந்து நாட்டில் தொழில்வாய்ப்பை பெற்றுதருவதாகக் கூறியே அவர் பணமோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## சர்வதேசச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருந்துகளைக் கொள்வனவு செய்ய யார் வேண்டுமானாலும் தன்னிச்சையாக முன்வந்து எமக்கு ஒத்துழைக்க முடியும். அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. தேவையான மருந்துகள் கிடைக்கும்பட்சத்தில், ஆளும்தரப்பு உடனடியாக தலையீடு செய்து மருந்துகளை கொள்வனவு செய்யும் என்றார்.

## சமுர்த்திப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு உயிரிழந்தார் என்று பணியகம் குறிப்பிட்டுள்ளது. குறித்த யுவதிக்கும் அவரது மூத்த சகோதரிக்கும் துபாயில் தாதியர் சேவையில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி அவர்களை ஓமானில் வீட்டு வேலைக்கு அனுப்புவதற்கு சந்தேகநபர்கள் செயற்பட்டனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா விசாவில் வெளிநாடு சென்றமையினால் தொழிலின்றி ஓமானின் பல்வேறு இடங்களிலும் குறித்த யுவதிகள் இருவரும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டமை தொடக்க விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட தமது தங்கை 2024 டிசெம்பர் 22 உயிரிழந்தார் என்று மூத்த சகோதரி தனது தாய்க்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய குறித்த யுவதியையும் அவரது மூத்த சகோதரியையும் ஏமாற்றி வெளிநாட்டுக்கு அனுப்பிய அம்பாந்தோட்டை பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கூறியுள்ளது.

சந்தேகநபர்கள் அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை ஜனவரி 17 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

## 2024 இல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசர சிகிச்சைப் பிரிவில் மாத்திரம் 42,700 நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6,700 பேர் விசர்நாய் கடி நோய்க்கு ஆளாகியவர்கள் என வைத்தியசாலை தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அவ்வாறு விசர்நாய் கடி நோய்க்கு ஆளாகிய 6,700 நோயாளர்களில் சுமார் 95 சதவீதமானோர் தாம் வாழும் வீட்டை அண்டிய பகுதிகளில் ஏற்பட்ட விபத்து காரணமாக வைத்தியசாலையில் சேர்ககப்பட்டுள்ளனர். வளர்ப்பு பிராணிகள் மூலம் விசர்நாய் கடி நோய்க்கு ஆளாகுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

மேலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் ஐவரில் ஒருவர் விசர்நாய் கடி நோயாளராவார். ஆகையால் வளர்ப்பு நாய்கள் மற்றும் உரிமையாளர்கள் இல்லாத வீதியில் நடமாடும் நாய்களுக்கு ஊசி வழங்குவதை உள்ளூராட்சி அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும்.

அத்தோடு வீட்டில் வளர்ப்புப் பிராணிகளை வைத்திருப்பவர்கள் அவற்றுக்கு உரிய ஊசிகளை வழங்கி அதற்கான அட்டைகளை பாதுகாப்பாக வைத்திருப்பதும் அவசியம் என்றார்.

# புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளை ஆளும்தரப்பு தாமதமின்றி ஆரம்பிக்கவேண்டும்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து

புதிய அரசமைப்பினை உருவாக்கும் முயற்சிகளில் அரசாங்கம் தாமதமின்றி ஈடுபடவேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் புதிய அரசமைப்பினை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கம் தனது பதவிக்காலம் முடிவடையும் வரை காத்திருக்காமல் புதிய அரசமைப்பினை உருவாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரட்ணவுடனான சந்திப்பின் பின்னர் கர்தினால் இதனைத் தெரிவித்துள்ளார்.

# யானைகள் கிராமத்துக்குள் நுழைவதை தடுக்கப் பாதுகாப்பு வேலி அமைக்குக

## வவுணதீவு மக்கள் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுகளில் காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக மக்கள் தமக்கான பாதுகாப்பு கருதி யானைப் பாதுகாப்பு வேலி அமைத்துத் தருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

காட்டுயானைகளின் தொல்லையால் கடந்த 10 ஆண்டுகளாக மிகவும் பாரதூரமான இழப்புக்களை, வவுணதீவு மக்கள் சந்தித்து வருகின்றனர். இதனால் அப்பகுதியில் செய்கையிடப்பட்டுள்ள விவசாயத்தையும் யானைகள் துவம்சம் செய்து வருகின்றன.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை புல்லுமலை, கித்துள், உன்னிச்சை போன்ற விவசாய கிராமங்களுக்குள் காட்டு யானைகள் புகுந்து, அங்குள்ள மக்களின் வாழ்வாதார பயிர்ச்செய்கைகளாக உள்ள தென்னை, வாழை, நெல், சோளம் போன்ற பல பயிரினங்களை அழித்துள்ளன.

எனவே, கிராமங்களுக்குள் யானைகள் நுழையாமல் இருக்க யானை பாதுகாப்பு மின்சார வேலிகளை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் முன்வைக்கின்றனர்.



பொருந்தொகை செலவுசெய்து விவசாயத்தை மேற்கொண்டால், அறுவடையாகும் காலத்தில் ஒரே நாளில் காட்டுயானைக் கூட்டம் புகுந்து ஒட்டுமொத்த பயிர்களையும் அழித்து, துவம்சம் செய்துவிட்டுப் போகின்றன. பயிர்கள், உடைமைகளை அழிக்கும் யானைகளால் தமக்கும் உயிராபத்து காணப்படுவதால் உரிய பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சம்மாந்துறையில் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

வெளிநாட்டு சிகரெட்டுகளை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை சுற்றுச்சூழல் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது மலையடிக்கிராமம் 02 பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒருதொகை வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் குறித்த கைது நடவடிக்கை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் காஸ் திருட்டு சந்தேகநபர் மடக்கிப் பிடிப்பு

(பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஸ் ஸாலிஹாத் மகளிர் அறபுக் கல்லூரி பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12.45 மணியளவில் காஸ் சிலிண்டர் திருடிய சந்தேக நபரை பொதுமக்கள் கைது செய்து சம்மாந்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சென்னல்கிராமம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் என பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மு.கா. கலந்துரையாடல்

(சினீஸ் கான்)

எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் குச்சவெளிப் பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது சம்மந்தமான கலந்துரையாடல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் எம்.எஸ். தௌபீக் தலைமையில் ஞாயிற்றுக்கிழ்ரீமை இடம்பெற்றது.

குச்சவெளிப் பிரதேச கட்சி ஆதரவாளர்கள் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் எதிர்காலத்தில் கட்சியால் எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும், மக்களுக்கு எவ்வாறான விதத்தில் கிராம மட்டங்களில் தெளிவூட்டல்களை நடத்த வேண்டும் போன்ற விடையங்கள் கலந்துரையாடப்பட்டது.







# மோட்டி வைரஸ் கல்வி பயிற்சி நிலையத்தின் 3ஆவது மாபெரும் பட்டமளிப்பு விழா நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

மோட்டி வைரஸ் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின்மூன்றாவதுமாபெரும்பட்டமளிப்பு விழா வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப பிரதான அரங்கில் மோட்டி வைரஸ் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.எப் பஸீஹா பர்வீன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் கலாநிதி மஹிந்த ரூபசிங்க கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதிகளாக இலங்கைக்கான பங்களாதேஷ் நாட்டின் உயர்ஸ்தானிகர் எண்டலிப் எலியஸ் மற்றும் மலேசியா நாட்டின் பிரதி உயர்ஸ்தானிகர் மொஹமட், சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர் எச்.பி.பி ஜய விக்கிரமசிங்க, கல்வி அமைச்சின் உதவி பணிப்பாளர் எச்.டி.பி.எல் குணதிலக, மோட்டி வைரஸ் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் ஏ.ஆர் எம் சர்ஜுன் மற்றும் பி.தைசீர், எம்.யு.எம். பாயிஸ், உதவி காணி ஆணையாளர் நாயகம் ஆர். டி .எஸ் சமிந்து லக்ஷ்மன் ஜயரத்ன, ஹியுஐவுயு நிறுவனத்தின் முன்னாள் உதவி பணிப்பாளரும், மோட்டி வைரஸ் கல்வி விவகார பணிப்பாளர் டபலியு.ஏ.கே.எஸ்.குமார, ஏவுயு தொழிற்கல்வி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் சுலங்கனி பெரேரா, இலங்கை ஐவுளி மற்றும் ஆடை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் தாரக நளின் கம்லத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் சிறப்பு அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் முஸ்லிம் கவுன்சில் ஆஃப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம். அமீன், வசந்தம் தொலைக்காட்சி முகாமையாளர் எம்.எஸ்.எம் இர்பான், சிரேஷ்ட ஊடகவியலாளர் அஷ்ரப், வெல்லஸ்ஸ தொலைக்காட்சி பணிப்பாளர் எம்.எஸ்.பி பண்டார மற்றும் அரச, அரச துறைசார்ந்த பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பதக்கங்களும் அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்கள்.



இந்நிகழ்வில் உளவியல், உளவளத்துணை, தகவல் தொழில்நுட்பம், ஆசிரியர் பயிற்சி நெறி , வர்த்தக முகாமைத்துவம், ஆரம்பகால குழந்தைப் பருவக் கல்வி, ஆங்கில மொழி, சிங்கள மொழி போன்ற கற்கைநெறிகளுக்கான டிப்ளமோ சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டதுடன் சுமார் 400 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். மேலும் இப்பட்டமளிப்பு விழாவில் மலேசியா, சுவிட்சர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து கல்விகற்ற மாணவர்களும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.







## பிரதி பொலிஸ் மா அதிபர் எனகூறி பணமோசடி செய்தவருக்கு மறியல்

பிரதி பொலிஸ் மா அதிபர் என தன்னை அடையாளப்படுத்தி வட்ஸ்அப் மூலம் பல்வேறு வர்த்தகர்களுடன் தொடர்பு கொண்டு பண மோசடி செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொரள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவனே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பிரதி பொலிஸ் மா அதிபர் என தன்னை அடையாளப்படுத்தி வட்ஸ்அப் மூலம் பல்வேறு வர்த்தகர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் மீது பொய்யான முறைப்பாடுகளைச் சுமத்தி சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறி மிரட்டி பண மோசடி செய்துள்ளார்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'பிஞ்சு மனம்' சிறுகதை நூல் வெளியீட்டு விழா

வெலிகம, ரிம்ஸா முஹம்மத் எழுதிய 'பிஞ்சு மனம்' சிறுகதை நூல் வெளியீட்டு விழா, ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார்.







# ‘கிளின் ஸ்ரீ லங்கா’ முன்னெடுக்கும் அரசு முதலில் தன்மீதுள்ள தமிழினப் படுகொலைக் கறையைச் சுத்தம் செய்ய வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் கருத்து

கிளின் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் சிறிலங்கா அரசு முதலில் தன் மீது பதிந்துள்ள தமிழினப் படுகொலைக் கறையை சுத்தம் செய்து கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச்செயலாளர்சி.சிவகஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீண்டகாலமாக விசாரணையின் பேரில் சிறிலங்காவின் சிறைகளில் வாடும் தமிழ்அரசியற் கைதிகளைதமிழ் விடுதலை செய்யக் கோரி வடக்கு - கிழக்குத் தழுவி முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும்வகையில்யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நேற்று (திங்கட்கிழமை) யாழ் பல்கலைக்கழக முன்றிலில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றித் தலைவர் கு.துவாரகன் மற்றும் ஒன்றியச் செயலாளர் சி.சிவகஜன் ஆகியோரால் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட போராட்டத்தில் அனைத்துப்பீடங்களினதும் மாணவர் ஒன்றியத் தலைவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஒப்பமிட்டு போராட்டத்திற்கு வலுச் சேர்த்தனர்.

கையெழுத்துப் போராட்டத்திற்கு தலைமையேற்றுகருத்துரையாற்றியயாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் சி.சிவகஜன், தமிழ் போர்க் கைதிகளின் கைதானது தனியே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பார்க்கப்பட கூடிதொன்றல்ல் மாறாக அனைத்துலமயமாக்கப்பட வேண்டியதமிழினப் படுகொலையின் நீட்சியேயாகும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் -

தற்போது விடுதலையை எதிர் நோக்கிக் காத்திருக்கும் 10 அரசியற்கைதிகளில் எட்டு பேரின் மீதே நீதிமன்ற வழக்குகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், இருவர் எவ்வித வழக்குகளுமின்றி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.



இனப்படுகொலைப் போரின் நீட்சியான போர் கைதிகளின் கைதுகளை நாம் நோக்க வேண்டும். எமது சுயநிர்ணயத்திற்கான கோரிக்கையை அனைத்துலகப் படுத்துவதற்கும் அதனை வலுச் சேர்ப்பதற்கும் ஜெனீவா சமவாயம் உள்ளிட்ட பன்னாட்டு சமவாயங்களிற்கு உட்பட்டு போர்க் கைதிகள் என்ற சொற்பதமே பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் அது சிறிலங்காவின் ஆட்சிப்பரப்பிற்குட்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குட்பட்டு அரசியற் கைதிகளாக சுருக்கப்பட்டுள்ளது.

மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிறிலங்காவின் சிங்கள - பௌத்த ஆட்சிகள் அனைத்தும் தொடர்ந்தும் பன்னாட்டுச் சமூகங்களை சமாளிப்பதற்காக வாக்குறுதிகளை வாரி வாரி இறைத்து வருகின்ற போதிலும் எங்கள் நிலையில் மட்டும் எந்த ஏற்றங்களும் நிகழ்ந்ததாகவில்லை.

கிளின் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் சிறிலங்கா அரசு முதலில் தன் மீது பதிந்துள்ள தமிழினப் படுகொலைக் கறையை சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அதில் ஒன்று தான் இனப்படுகொலையின் நீட்சியான போர்க் கைதிகளின் விடுதலை.

காலில் வடு என்றால் காலை வெட்டி எறிவதாக இல்லாமல், அந்த வடுக்களை ஆற்றுவதாக நல்லிணக்கம் அமைய வேண்டும். நல்லிக்க உரையாடல்களை தொடங்கும் அனுர அரசு உண்மை நல்லிணக்கத்தில் நம்பிக்கை இருந்தால் அதனை போர்க்கைதிகளின் விடுதலையில், இனப்படுகொலைக்குப் பொறுப்புக் கூறுவதில், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தை ஏற்று அங்கீகரிப்பதில், ஈழத்தமிழர்களின்சுயநிர்ணயத்தை அங்கீகரிப்பதில் காட்ட வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்தி நிற்கின்றோம் எனக் குறிப்பிட்டிருந்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.01.2025இல் வெளியிடப்பெற்றது